# குற்றவியல் சட்ட சீர்திருத்த விழிப்புணர்வு திட்டம் (CLRAP)

இந்த வலைத்தளத்தின் நோக்கம் உள்துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குற்றவியல் சட்டங்களில் சீர்திருத்தங்களுக்கான குழு பற்றிய வர்ணனைகளை ஒன்றிணைத்து பரப்புவதாகும். குற்றவியல் சட்ட சீர்திருத்தக் குழுவின் ஆணை தெளிவாக இல்லை, ஆனால் இது இந்தியாவில் குற்றவியல் சட்டத்தில் நீண்டகால மாற்றங்களை பரிந்துரைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த மாற்றங்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் நியாயமாக இந்தியாவில் வாழ விரும்பும் ஒவ்வொரு நபருக்கும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். இந்திய குற்றவியல் அமைப்பு காவல் துறையின் வன்முறை மற்றும் சித்திரவதைகள்,சட்ட சிக்கல்கள் ஆகியவற்றின் மூலம் மத சிறுபான்மையினர், ஏழை, தலித் மற்றும் ஆதிவாசி சமூகங்கள் போன்றோரை கடுமையாக பாதிக்கின்றனது . பாலின அடிப்படையிலான வன்முறையை அதிகமாக அனுபவிக்கும் பெண்கள், திருநங்கைகள் மற்றும் பாலியல் சிறுபான்மையினர் ஆகியோருக்கு தற்போதிய குற்றவியல் சட்டங்கள் மூலம் முறையான நீதி கிடைப்பதில்லை. குற்றவியல் சட்டத்தின் சீர்திருத்தங்கள் நம் அனைவரையும் ,குறிப்பாக நமது சமூகத்தின் மிகவும் ஒடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் கடுமையாக பாதிக்கின்றது, எனவே குற்றவியல் சட்டத்தில் கொண்டுவரப்படும் சீர்திருத்தங்களை புரிந்துகொள்வது மிகவும் முக்கியம்.

இந்த பக்கத்தில் சீர்திருத்தக் குழுவின் அமைப்பு மற்றும் செயல்பாட்டின் முக்கிய பிரட்சனைகளை சுருக்கமாகக் கூறுகிறோம். சீர்திருத்தக் குழுவின் முக்கிய பிரட்சனைகள் இவையாகும்,

- பிரதிநிதி அல்லாத அமைப்பு
- அதன் விலக்கு முறைகள்
- அதன் செயல்பாட்டின் ஒளிபுகா தன்மை
- கேட்கப்பட்ட கேள்விகளின் வடிவமைப்பு
- பணிகளை முடிப்பதற்கான குறுகிய காலக்கெடு

இந்த பிரட்சனைகளை அனைவருக்கும் சட்டபூர்வமான பயிற்சி உள்ளதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் அனைவரும் அணுகக்கூடிய வகையில் விவாதிக்க முயற்சித்திருக்கிறோம். குற்றவியல் சீர்திருத்தக் குழுவின் செயல்பாடு ஒரு பொது நலன் சார்ந்த பிரச்சினை என்பதை வலுப்படுத்துவதே எங்கள் நோக்கம்.

குழுவின் கூறப்பட்ட நோக்கம் அரசியலமைப்பு விழுமியங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் சீர்திருத்தத்தையும், தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் தேசத்தின் பாதுகாப்பையும் குறிக்கிறது என்றாலும், அது மிகவும் நிறைந்த நேரத்தில் வருகிறது. உலகளாவிய கோவிட் - 19 தொற்றுநோயால் நாட்டின் மக்கள் பாதிக்கப்படுகின்றனர், இதன் போது குடிமகனின் தொழிலாளர், சுற்றுச்சூழல் மற்றும் நில உரிமைகளை பாதிக்கும் தொலைதூர 'சீர்திருத்தங்களை' அரசாங்கம் ஏற்கனவே முன்வைத்துள்ளது. செயல்பாட்டாளர்கள், மாணவர்கள், சிறுபான்மையினர் மற்றும் கல்வியாளர்களுக்கு எதிராக கடுமையான குற்றவியல் சட்டங்கள் (தேசிய பாதுகாப்பு சட்டம் 1980 (என்எஸ்ஏ) மற்றும் சட்டவிரோத செயல்பாடுகள் (தடுப்பு) சட்டம் 1967 (யுஏபிஏ) போன்றவற்றையும் அரசாங்கம் தேர்ந்தெடுத்து வருகிறது. இந்தப் பின்னணியில், குற்றவியல் சட்டத்தின் பல்வேறு அம்சங்களை அதிகபட்ச வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடன் சீர்திருத்தவும், நேர்மை மற்றும் நீதியின் மதிப்புகளை நிலைநிறுத்தவும் பரந்த அளவிலான ஆணையைக் கொண்ட ஒரு குழு மிகவும் முக்கியமானது. குற்றவியல் சட்டங்களின் பல்வேறு அம்சங்களுக்கு சீர்திருத்தம் அவசியம் என்றாலும், இந்த குழுவில் உள்ள பின்வரும் சிக்கல்கள் அதன் கடமைகளை போதுமான அளவில் நிறைவேற்ற முடியும் என்பது சாத்தியமில்லை.

## வெளிப்படையற்றதன்மை

A) குழுவின் நோக்கமும் விதிமுறைகளும் மக்களுக்கு கூறப்படவில்லை. இது ஏன் முக்கியம் என்றால், அக்குழு செய்யும் வேலை சரியாக இருக்கிறதா என்று மக்களுக்கு தெரிய வேண்டும்.

B) மக்கள் குழுவுக்கு கூறிய கருத்துகளை அக்குழு வெளியிடவில்லை. இது ஏன் முக்கியம் என்றால் மக்கள் கூறிய கருத்துகள் தவறாகவோ அல்லது முழுவதாக கூறப்படாமல் இருக்குமாறு ஒரு சூழ்நிலை உண்டாகலாம்.

## காலவரை

a) இந்தக் குழுவானது கோவிட்-19 என்கிற உலகளாவிய நோய்த்தொற்றின் இடையே ஸ்தாபிக்கப்பட்டதாகும். மேற்குறிப்பிட்ட விழிப்புணர்வுத் திட்டம் எழுத்தாக்கப்படுகையில் உலகளாவியரீதியில்( ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிரேசிலை தவிர) இந்தியாவிலேயே அதிகளவு நோய்த்தொற்று ஏற்பட்டிருந்தது. இம்மாதிரியான அசாதாரண சூழ்நிலையில், பொதுச் சுகாதாரம், வேலையின்மை போன்ற அடிப்படை வாழ்வாதாரத்தை அசைத்துப் பார்க்கும் எதிர்மறையான விளைவுகளை எதிர்கொள்ள இந்திய குடிமக்கள் போராடி வருகின்றனர். இந்நிலையில் இத்திட்டத்திற்கு மக்களுடைய முழுமையான பங்களிப்பினை எதிர்பார்ப்பது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக தெரிகின்றது.

b) வலைத்தள தகவல் படி, இக்குழுவின் நோக்கமானது குற்றவியல் சட்டத்தின் நிலை முறை, சாட்சியம் மற்றும் நடைமுறை அம்சங்களின் சீர்திருத்தம் . குற்றவியல் சட்டத்தின் இந்த ஒவ்வொரு அம்சமும் பரந்த உள்ளடக்கத்தை கொண்டது. உதாரணமாக நிலை முறை சட்டம் என்பது குற்றங்களை வரையறுத்தல், எவ்வகையான நடத்தைகள் குற்றமாக கருதப்பட வேண்டும், குற்றத்திற்கான நோக்கம் இல்லாதவிடத்து எம்மாதிரியான அவர்கள் தண்டிக்கப்பட கூடியவர்கள், எச்சந்தர்ப்பத்தில் குற்றமுயற்சிக்காக ஒருவர் தண்டிக்கப்பட முடியும், குற்றத்திற்கான கூறுகள் இருந்த பொழுதிலும் பிரதிவாதிகள் எச்சந்தர்ப்பங்களில் விடுதலை செய்யப்பட முடியும், இந்திய குற்றவியல் சட்டம் 1860 இன் எந்த வார்த்தைகளின் பொருள்கள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட முடியும், செயலின்மை எப்பொழுது தண்டிக்கப்பட வேண்டும், இச்சட்டத்தின் கீழ் எவ்வாறு குற்றங்கள் வகைப்படுத்தப்பட வேண்டும் என இவ்வாறு பல்வேறு பாகங்களை இந்த நிலை முறைச்சட்டம் உள்ளடக்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட அனைத்தும் ஆறு கேள்வித் தொகுப்புகளின் அடிப்படையில் மாற்றப்படவிருக்கும் சீர்திருத்தச் சட்டத்தின் ஒரு அம்சம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. முழுமையான சீர்திருத்தத்திற்கான ஆலோசனையானது இன்னும் மூன்று மாதங்களில் அதாவது 4/7/2020 இல் இருந்து 9/10/2020க்குள் நடத்தி . கிட்டத்தட்ட 300 க்கும் மேற்பட்ட

வினாக்களைக் கொண்ட இந்த ஆறு வினாத்தொகுப்புகளுக்கு விடையளிக்க பொருத்தமற்ற கால வரையறையை குழு நிர்ணயித்துள்ளது.

**முக்கியமான சட்டங்களில் ஒன்றான குற்றவியல் சட்டத்தை இவ்வளவு குறைந்த காலத்துள் மாற்றி அமைத்தல் என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது மட்டுமன்றி விரும்பத்தகாததாகும்.**

இவ்வாறான பாரிய மாற்றத்தை இத்தகைய குறுகிய காலத்தில் சாதாரணமான சூழலிலும் கூட ஏற்றுக் கொள்வது என்பது கடினமான ஒன்று. அப்படியிருக்க, உலகளாவிய நோய்த்தொற்று உள்ள இந்தக் காலப்பகுதியில் இது அசாத்தியமானது. ஒரு ஒப்பீட்டுப் பார்வைக்காக குறிப்பிடுகையில், குற்றவியல் சட்ட சீர்திருத்தத்தின் கடைசி குழுவான மலிமத் குழு அவர்களுடைய அறிக்கையை வெளியிட இரண்டரை வருடங்கள் எடுத்துக் கொண்டனர்.

<u>**வினாத் தொகுப்பு**</u>

a) வினாத்தொகுப்புக்கள் மிகவும் விரிவானவை. உதாரணமாக முதலாவது வினாத் தொகுப்பு மட்டுமே நாற்பத்தாறு கேள்விகளைக் கொண்டது. இக்கேள்விகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் மாற்றத்திற்கான **காரணத்தையும் நோக்கத்தையும்** பற்றி குழு சரியாக வழிகாட்ட தவறிவிட்டது. எந்த அடிப்படையில் சட்டத்தில் குறிப்பிட்ட பாகங்கள் சீர்திருத்தப்பட வேண்டுமென குழு தீர்மானித்தது?

b) வினா தொகுப்புகள் சரியாக வடிவமைக்கப்படவில்லை. வினாக்களில் தெளிவின்மை, விளக்கமின்மை மற்றும் ஆதாரமற்ற அனுமானங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. சட்டக் கல்வி பயிலாதவர்கள் இலகுவாக புரிந்து கொள்ள முடியாத வகையில் இவ்வினாக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கான விளக்கத்திற்கு பின்வரும் உதாரணத்தை கவனிக்கவும்.

குழுவினது வினா தொகுப்பில் இருக்கும் குறைபாடுகளுக்கான விளக்கம்: முழுமையான பொறுப்பு

வெளியிடப்பட்ட வினா தொகுப்பிலிருந்து ஓர் கேள்வியை எடுத்துக் கொண்டால், குற்றத்தின் தன்மை மற்றும் இலக்கின் எத்தகைய கோட்பாடுகள் அக்குற்றத்தை இந்திய குற்றவியல் சட்டத்தில் முழுமையான பொறுப்பின் கீழ் கொண்டுவர வழிகாட்டுகிறது? சட்டத்துறை சாராத சாதாரண மக்களுக்கு முழுமையான பொறுப்பு எனும் பதத்திற்கான பொருள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இப்பதத்தை இலகுவான முறையில் விளக்கினால், தடை செய்யப்பட்ட விளைவை ஏற்படுத்தக்கூடிய செயலை உள்நோக்கத்துடன் செய்தல் முழுமையான பொறுப்பாக கருதப்படுகிறது.

உதாரணத்திற்கு காசோலை ஒன்று ஏற்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டால் அதை வழங்கியவருக்கு அதற்கான நோக்கம் இல்லை எனும் காரணத்திற்காக அவர் விடுவிக்கப்பட மாட்டார். வேகமாக வாகனத்தை செலுத்தி குற்றம் புரிந்த ஒருவர் வேகத்தை மீறுவதற்கான நோக்கமின்மையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு விடுவிக்கப்பட மாட்டார். இவை ஒரு புறமிருக்க, வினாக்களில் முழுமையான பொறுப்பிற்கான சந்தர்ப்பங்களை வழங்கி இவை குற்றவியல் சட்டத்தின் கீழ் வருவது பொருத்தமானதா எனவும் ஏன், எச்சந்தர்ப்பத்தில் என அதற்கான காரணங்களும் வினவப்படுகிறது. முழுமையான பொறுப்பு எனும் குற்றத்தின் தீவிரமான விளைவுகளை அதாவது குற்றம் இழைப்பதற்கான நோக்கம் இல்லாவிடினும் குற்றம்சாட்டப்படக் கூடிய அபாயமானது நன்கு ஆலோசிக்கப்படவேண்டிய விடயமாகும். மேலும் முழுமையான பொறுப்பு எனும் குற்றமானது இந்திய குற்றவியல் சட்டத்தில் இடம்பெறாதது ஒரு குறைபாடாக கருதப்பட்ட காரணம் பற்றிய தரவு குழுவின் இணையதளத்தில் குறிப்பிடப்படவில்லை.

c) இக்குழுவானது வினாத் தொகுப்புகளை ஒரு தொடர் வரிசையில் அதாவது முதலில் நிலைமுறை, நடைமுறை பின் சாட்சிய சட்டம் என்னும் ஒழுங்கில் வெளியிடவுள்ளது. குற்றவியல் சட்டத்தின் இந்த மூன்று அம்சங்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இருக்கையில் இவற்றைத் தனியாக ஆராய்வது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக காணப்படுகின்றது.

**<u>செயல்முறை</u>**

a. கமிட்டி பற்றிய தகவல்கள் முக்கியமாக அதன் இணையதளத்தில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளன. குழுவின் ஆலோசனைகளில் பங்கேற்பது இந்த ஆன்லைன் ஆதாரங்களை அணுகுவதையும், அவற்றை எவ்வாறு உபயோகிக்கலாம் என்பதை அறிவதையும், வலைத்தளம் செயல்படும் மொழியை (ஆங்கிலம்) புரிந்துகொள்வதையும் சார்ந்துள்ளது.

b. மொழிகளின் தீவிரமான பன்முகத்தன்மை மற்றும் குறைந்த இணைய ஊடுருவல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்பட்ட ஒரு நாட்டின் மிகச் சிறந்த நேரங்களில் கூட இவை பிரத்தியேகமான நடைமுறைகள் ஆகும். இந்த யதார்த்தத்தின் மோசமான நினைவூட்டல்கள் அறிக்கைகளின் வடிவத்தில் உள்ளன. அவ்வறிக்கைகளில்,சர்வதேச அளவில் பரவும் நோய் தாக்கத்தின் போது ஆன்லைன் வகுப்புகளை அணுக முடியாமல் இந்திய மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>அமைப்பு</u>

a. இக்குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டது. அனைத்து உறுப்பினர்களும் வேறு ஒரு தொழிலை முழு நேரத் தொழிலாகக் கொண்டவர்கள். குறுகிய கால அவகாசம் கொண்ட குழுவானது முழுநேர உறுப்பினர்கள் இன்றி திறமையாக செயல்பட முடியாது என்பது சிந்திக்கப்பட வேண்டியது.

b. இக்குழுவில் இன மத பாலின மற்றும் சாதிச் சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவத்தை காண முடியவில்லை. உழைக்கும் வர்க்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரதிநிதித்துவத்தையும் காணமுடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக வட இந்தியாவின் ஓர் வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியை தவிர வேறு எங்கிருந்தும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவில்லை. அடித்தட்டு மக்களுக்கான சமூக அமைப்புக்கள் குழுவில் இடம் பெறவில்லை. குற்றவியல் சட்டத்தினால் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கான சரியான பிரதிநிதித்துவம் இல்லாதவிடத்து ஓர் அர்த்தமுள்ள, ஜனநாயகமான மறுசீரமைப்பை ஏற்படுத்த முடியாது. உதாரணத்திற்கு ஆணவக்கொலையை இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் ஓர்க்குற்றமாக கொண்டுவர ஆலோசனை செய்யப்படுகிறது. இது சமுதாயத்தில் சாதி மத அதிகாரத்தை நிலைநிறுத்த மேற்கொள்ளப்படும் ஒரு குற்றமாகும். அந்தவகையில் இதைப் பற்றி பேசுவதற்கான சரியான பிரதிநிதிகள் குழுவில் இல்லாதது விரும்பத்தகாததாக உள்ளது.

c. இந்திய சட்ட ஆணையம் சட்டங்களின் குறைபாடுகளை கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கான சீர்திருத்தங்களை கொண்டு வருவதையே நோக்கமாகக் கொண்டது. அப்படியிருக்க இத்தகைய முக்கியமான சட்டத்தை சீர்திருத்த தனியாக ஓர் குழு அமைக்கப்பட்டது தவறாகும்.

**மேற்குறிப்பிடப்பட்ட விமர்சனத்தின் அடிப்படையில் இக்குழுவினர் செயல்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் குற்றவியல் சட்டம் சீர்திருத்தப்பட வேண்டுமாயின் போதுமான அளவு ஆலோசனை மற்றும் சரியான முறைகளை கடைப்பிடித்து வெளிப்படையாகவும் சரியான பிரதிநிதித்துவத்தை கொண்ட குழு மூலமாகவும் இந்த கோவிட்-19 நோய் தொற்றிலிருந்து மீண்டு நாடு பழைய நிலைக்கு திரும்பியவுடன் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**